DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 13/2020

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருப்பண கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 27/04/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் சத்திரப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 06.06.2019 ஆம் தேதி காலை 7.45 மணியளவில் எனது அப்பா கருப்பணகவுண்டர் பழனி – திண்டுக்கல் மேற்கே இருந்து கிழக்காக அடையாள வேலு கோவிலுக்கு அருகில் அவருக்கு சொந்தமான TVS XL Super–ல் (பதிவு எண் தெரியவில்லை) சென்ற போது அதே திசையில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த டாடா இண்டிகோ என்ற நான்கு சக்கர வாகனம் பின்னால் இருந்து எனது அப்பா மீது மோதிவிட்டது. எனக்கு பக்கத்து தோட்டத்துக்காரரான பெரியசாமி என்பவர் எனது அப்பா மீது வாகனம் மோதி விபத்துக்குள்ளானது குறித்து தகவல் சொன்னார். தகவல் கிடைத்ததை அடுத்து நானும், எனது தம்பி செல்வராஜும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றோம். அங்கு என்.கே.பெட்ரோல் பங்க் அருகே எனது அப்பாவை படுக்க வைத்து இருந்தார்கள். எனது அப்பாவின் பின்பக்க தலையில் இரத்தக்காயமும், காலில் அடிப்பட்டு இருந்தது. அதன் பின்பு நானும், எனது தம்பி செல்வராஜும் நாங்கள் சென்றிருந்த காரில் எனது அப்பாவை ஏற்றிக் கொண்டு ஒட்டன்சத்திரத்தில் உள்ள குமரன் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றோம். அப்போது இரவு சுமார் 8.00 மணி இருக்கும். குமரன் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தனர். அதற்கு அடுத்த நாளான 07.06.2019 ஆம் தேதி அன்று நள்ளிரவு 1.30 மணியளவில் எனது அப்பா இறந்துவிட்டார். அதன்பின்னர் இறந்துபோன எனது அப்பாவின் உடலை ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். அங்கு எனது அப்பாவின் பிரேதத்தை உடற்கூராய்வு செய்தார்கள்.ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரியின் பெயர் சண்முகநாதன். அவர்தான் எனது அப்பாவின் மீது மோதினார். கடந்த 06.06.2019 ஆம் தேதி அன்று நண்பகல் 12.30 மணியளவில் விபத்து குறித்து நான் சத்திரப்பட்டி காவல் நிலையத்தில்

புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்தவர் எனது அப்பா என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், நான் கேள்விப்பட்டு தான் சம்பவ இடம் சென்றேன் என்றாலும் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் இழப்பீடு வழக்கு கோரி அதில் நான் ரூ.4,00,000/- மட்டும் இழப்பீடாக பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால்எழுதப்படவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே எழுதப்பட்டு இருந்தது நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். இந்த விபத்து எனது அப்பாவின் கவனகுறைவினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார் அளித்ததே விபத்து இழப்பீடு கோரும் வழக்கு தொடுப்பதற்காக கொடுக்கப்பட்டது தான் என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்னதாக எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி சாலைவிதிமுறைகளை பின்பற்றி தான் வந்தார் என்றாலும், எனது அப்பா கவனக்குறைவாக வந்து தனக்கு தானே விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றாலும் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.27 17:35:38 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 27/04/2026